வாழ்நாளெல்லாம் போதாதே

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட

ஆழ்கடல் போலே ஞானம் நிறைந்து

அருமை நபிகளின் புகழ்பாட

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட

ஆயிரம் கவிஞர்கள் பிறந்தாலும்

அவர்புகழ் பாட முடியாது

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட

ஆதியின் தூதாய் புவி வந்து

அன்பும் அறிவும் தினம் தந்து

நீதியின் வழியில் பணி ஈந்து

நேர்மை விளங்கிட அறம் காத்து

அற்புதமான அறிவுரை மூலம்

அகிலத்தில் தீனை வளர்த்தாரே

அகிலத்தில் தீனை வளர்த்தாரே

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட

மாதர்கள் துயரம் நீங்கிடவே

மறுமண மாண்பு ஓங்கிடவே

சாதகப் பண்பு தழைத்திடவே

சற்குண வாழ்வு செழித்திடவே

ஆதரவான சேவை புரிந்து

அமைதியின் மார்க்கம் தந்தனரே

அமைதியின் மார்க்கம் தந்தனரே

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட

கடமைகள் ஐந்தைக் காட்டினரே

கருணை வாழ்வை நாட்டினரே

திடமாய் பேதம் ஓட்டினரே

திறமை ஞானம் கூறினரே

தேசம் யாவும் ஆசிகள் கூறி

தீனுல் இஸ்லாம் தந்தனரே

தீனுல் இஸ்லாம் தந்தனரே

வாழ்நாளெல்லாம் போதாதே

வள்ளல் நபிகளின் புகழ்பாட